**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா**
**அவர்களின் அறிக்கை – 4.4.2013**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டிற்கு உணவினைத் தந்து, நல்வளங்களைத் தந்து, வீட்டினை ஒளியுடையதாக்கி, நாட்டைக் காக்கும் நற்செயல்களை செய்து வரும் நீர்வள அமைப்புகளான அணைக்கட்டுகள், ஏரிகள் ஆகியவற்றை பராமரிப்பது மிக மிக அவசியம் என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு பாசன உள்கட்டமைப்புகளை புனரமைக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பாசன நிலங்களுக்கு ஆதாரமாக உள்ள உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தும் வகையில், தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் IAMWARM, உலக வங்கி நிதியுதவியுடன் 2005–ஆம் ஆண்டு, அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் உப வடிநில கட்டமைப்பு, அதாவது Sub-Basin Framework முறையில் ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின் மூலம் பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசன நில வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவது ஆகும். இந்தத் திட்டத்திற்கான மொத்த திருத்திய மதிப்பீடு 2,816 கோடி ரூபாய் ஆகும். இந்த நிதியிலிருந்து சுமார் 6.69 லட்சம் ஹெக்டேர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் அணைக்கட்டுகள் முறைசார் மற்றும் முறைசாரா ஏரிகள் மற்றும் அதன் நீர்வழங்கு வாய்க்கால்களை புனரமைத்து நவீனப்படுத்த நீர்வள ஆதாரத் துறைக்கு 2082 கோடியே 85 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. எஞ்சிய நிதி பிற துறைகளுக்கு ஒதுக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 25 மாவட்டங்களில் 4910 ஏரிகள், 662 அணைக்கட்டுகள் மற்றும் அதன் 8071 கிலோ மீட்டர் நீர்வழங்கு வாய்க்கால்கள் ஆகியவற்றை புனரமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் பெரும்பாலான பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ், மேலும் சில பாசன அமைப்புகளை புனரமைக்க வேண்டியிருப்பதால் தமிழக அரசின் வேண்டுகோளை அடுத்து இந்தத் திட்டத்தின் கால அளவை 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை நீட்டித்து உலக வங்கி அனுமதித்துள்ளது.

இதனையடுத்து, தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 17 மாவட்டங்களில் 26 உபவடி நிலங்களில் உள்ள 310 ஏரிகள், 63 அணைக்கட்டுகள் மற்றும் அதன் நீர்வழங்கு வாய்க்கால்களை புனரமைத்து, நீர் வழங்கும் திறனை மேம்படுத்துதல் மற்றும் மத்திய மண்டலத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் 258 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். அதன்படி, நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே நடைபெற்று கொண்டிருக்கும் பணிகளையும், தற்பொழுது செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ள பணிகளையும் செய்து முடிப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்ட கால அளவு 1.4.2013 முதல் 30.9.2014 வரை 18 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், வடகிழக்கு பருவ மழைக் காலத்தின் போது மருதையாறு நதியில் மிகக் குறுகிய காலத்தில் அதிக அளவில் வரப் பெறும் நீரை உரிய முறையில் பாசனத்திற்கு பயன்படுத்தும் வகையில் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை கிராமம் அருகில், மருதையாற்றின் குறுக்கே 108 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிதாக மருதையாறு நீர்த்தேக்கம் ஒன்று அமைக்கப்படும். மருதையாறு நீர்த்தேக்க திட்டம் 211.58 மில்லியன் கன அடி நீர் கொள்ளளவு கொண்டதாக அமையும்.

இத்திட்டத்தை செயலாக்குவதன் மூலம் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை, ஆதனூர், கூத்தூர், புஜங்கராயநல்லூர், நொச்சிக்குளம், தொண்டப்பாடி, அழகிரிபாளையம், கூடலூர், சாத்தனூர் ஆகிய 10 கிராமங்களிலுள்ள 4,194 ஏக்கர் புன்செய் நிலங்கள் புதிதாக பாசன வசதி பெறும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்க ஏதுவாக பாசனத்திற்கு தேவையான நீர் கிடைப்பதுடன், அப்பகுதிகளில், நிலத்தடி நீர் மட்டமும் உயர வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

* * * * * * *